பக்கங்கள்:14 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 19 திங்கட்கிழமை 02.05.2022 கதிர் 178

### இது ரகசியம் அல்ல!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கதி என்ன? அவர் பிரதமர் பதவியில் நீடிப்பாரா? அல்லது பதவி விலக்கப்படுவாரா? அல்லதுதாமாகப்பதவிவிலகுவாரா?

இலங்கை முழுவதிலும் அரசியல் பேசுவோரின் சொல்லாடல்களில் ☞2

# அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகள்!

## ஒரே சமயத்தில் இவ்வாரத்தில் ஒப்படைப்பு

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் இவ்வாரத்தில் ஒரே சமயத்தில் சபாநாயகரிடம் சமர்ப்பிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது.

ஏற்கனவே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வடிவம் தயாராகியுள்ளது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு வருகின்றனர்.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வடிவத்தை தயாரிக்கும் வேலைகள் நேற்று இரவு வரை மும்முரமாக இடம்பெற்றன எனத் தெரியவருகிறது. ☞14

## தமிழ்த்தேசியக் கூட்டு மேதினம் பேரணி, எழுச்சிக் கூட்டத்துடன்

### கிளிநொச்சி நகரில் மக்கள் திரண்டனர்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணம் தழுவிய, தமிழ்த்தேசியக் கூட்டு மேதினம், கிளிநொச்சி மாவட்டத்தின் 18 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைவில் நேற்றுக் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து மாபெரும் பேரணியாக ஆரம்பித்து, கிளிநொச்சி பசுமைப்பூங்காவை வந்தடைந்ததும், அங்கு மேதின எழுச்சிப் பொதுக்கூட்டம் ☞2



## ராஜபக்ஷக்களுடன் உறவை முறித்துக் கொண்டு மக்களின் பக்கம் நிற்கிறோம் என்கின்றார் ஜீவன்

கொட்டகலை, மே 02

ஓரணியில் திரள்வோம், ஒற்றுமையாக இருப்போம், உரிமைகளை வெல்வோம், மீண்டெழுவோம் என அறைகூவல் விடுத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், நாய்கள் குரைக்கும்போது சிங்கங்கள் அஞ்சுவது கிடையாது எனவும் சூளுரைத்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டம் கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்து ☞14

## ஜனாதிபதியுடன் அரசையும் வீட்டுக்கு அனுப்புவோம் அதுவே தெற்கு மே தின நிகழ்வுகளில் எதிரொலிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசும் உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதை பிரதானமாக வலியுறுத்தியே தெற்கு அரசியல் களத்தில், எதிரணிகளின் மே தின பேரணிகளும், கூட்டங்களும் இடம்பெற்றன.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில், அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகள்மீது சரமாரியாக விமர்சனக் கணைகள் தொடுக்கப்பட்டன. அத்துடன், மஹிந்த ராஜபக்ஷ

இல்லாத இடைக்கால அரசை ஏற்க முடியாதெனவும் மொட்டு கட்சி திட்டவட்டமாக அறிவித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பு, சுதந்திர சதுக்க வளாகத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய அகட்சியின் பிரமுகர்கள், ஜனாதிபதியும், பிரதமரும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தினர். ஜனாதிபதி தலைமையிலான ☞2

## புனித ரம்ழான் நாளைதான்

இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் நாளை 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே புனித ரம்ழான் பெருநாளைக் கொண்டாடவுள்ளனர் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

புனித சவ்வால் மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு நேற்று மாலை கொழும்பு பெரிய ☞2

## தேர்தலை நடத்துவதற்கு மைத்திரியும் பரிந்துரை!



மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அனைத்து தலைவர்களும் பதவி விலகித் தேர்தலை நடத்தி புதிய அரசாங்கத்தை தெரிவு செய்வதற்கு மக்களுக்கு இடமளிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு ☞2

## கிழக்கில் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கல்லடியில் எழுச்சியுடன் மே தினம்

(சு.கிருபாகரன்)

முதன்முறையாக மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் மேதினப் பேரணியும், கூட்டமும் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்துக்கு அருகிலுள்ள மீனிசைப் பூங்காவில் மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றன. பெரும் திரளான மக்கள் இதில் பங்குபற்றினர். ☞14



## இலங்கையைப் நெருக்கடியில் இருந்து மீட்க இந்தியாவும் போராடிக் கொண்டிருக்கின்றது

### இ.தொ.கா. மே தினத்தில் பாரதிய ஜனதா அண்ணாமலை தெரிவிப்பு



கொட்டகலை, மே 02

இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக் கொண்டிருக்கின்றது. அன்று அனுமான் எப்படி சஞ்சீவ மலையைச் சுமந்தாரோ, அது போலவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சுமப்பதற்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார். ☞2

## 6 யாழ் மீனவர்கள் தமிழகத்தில் கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.02

இலங்கையில் இருந்து ட்ரோலர் படகு ஒன்றில் தொழிலிற்கு பயணித்த ஆறு மீனவர்கள் இந்திய கரையோர காவல் படையினரால் தமிழ்நாட்டில் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கடற்றொழிலிற்கு பயணித்த சமயம் கோடியாக்கரைக்கு அண்மையில் இந்தியக் கடல் பிரதேசத்திற்குள் அத்துமீறி உள்நுழைந்த குற்றச்சாட்டில் இந்தியக் கரையோர காவல்படையினரால் கைது சைய்யப்பட்டனர்.

### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எதிரொலிக்கும் கேள்விகள் இவைதான். என்னைக் கேட்டால் இது விடயத்தில் யோகர் சுவாமிகளின் மகாவாக்கியம் ஒன்றுதான் பதிலாக அமைய முடியும் என்பேன். அது - 'எப்பவோ முடிந்த காரியம்' என்பதுதான்.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இழந்து, எதிரணியில் போய்க் குந்தியிருப்பது என்பது எப்பவோ தீர்மானிக்கப்பட்ட விடயம். அதுதான் இன்றைய நிலைமை. அவர் தாமாக ராஜினாமாச் செய்து பதவியை விட்டு விலகுவாரா அல்லது ஜனாதிபதி இன்னொரு பிரதமரை புதிதாக நியமிப்பதன் மூலம் இவரை வீட்டுக்கு அனுப்புவாரா என்பதுதான் இப்போது முடிவு செய்யப்பட வேண்டிய விவகாரம்.

எது, எப்படி என்றாலும் விரைவில் - அதுசிலசமயங்களில் ஓரிரு நாள்களாகக் கூட இருக்கலாம் - மஹிந்த ரஜபக்ஷ எதிரணியில் போய்க் குந்துவது என்பது நிச்சயமாகி விட்ட விடயம். ஓரிரு தினங்களுக்கு முன்னர் 'உங்களுடன் எதிரணியில் விரைவில் வந்து இருப்பேன்' என்று ஒரு செய்தியைக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அனுப்பி வைத்தார் என்றும் ஒரு தகவல் உண்டு.

நேற்றுக் காலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. பிரதமர் பதவி தொடர்பிலும், இந்த அரசு தொடர்பிலும் தாங்கள் என்ன முடிவு எடுத்தாலும் - தங்களுக்கு உசிதமான எந்த முடிவையும் - ஏற்றுக் கொள்ளத் தான் தயார் என்று ஜனாதிபதிக்கு அச்செய்தியில் பிரதமர் தெரிவித்தார் என அறிய வந்தது.

தற்போதைய பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்குத் தன்னுடைய செய்தியாகப் பிற தரப்புகள் மூலம் மஹிந்தர் அனுப்பி வைத்த இன்னொரு தகவலும் உண்டு.

'நீங்கள் (ஜனாதிபதி) கேட்ட எல்லாவற்றையும் நான் செய்து தந்துள்ளேன். முதலில் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் கேட்டீர்கள். தந்தேன். வெற்றியையும் வாங்கித் தந்தேன். தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் பெருவெற்றி ஈட்டிக் கொடுத்தேன். அதன் பின்னர் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கூறினீர்கள். அதையும் 20 ஆவது திருத்தத்தை முன்நின்று கொண்டுவந்து நான் ஏற்படுத்தித் தந்தேன். முன்னைய அமைச்சரவையையும் சரி, இப்போதைய அமைச்சரவையையும் சரி நீங்களே உங்கள் விருப்பப்படி நியமித்தீர்கள். அரசின் கொள்கைக் கோட்பாடுகளை நீங்களே தீர்மானித்து, அறிவித்து நடைமுறையும்படுத்தினீர்கள். இப்போது அரசுக்கு நெருக்கடி வரும் போது அதற்கான முழுப்பொறுப்பையும் என் மீது செலுத்த விரும்புவது சரியானது அல்ல. ஆனாலும் என் மீது குற்றம் சுமத்தி, என்னைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்றி, புதிய அரசை உருவாக்க நீங்கள் விரும்பினாலும் அதற்கும் நாங்கள் எதிர்ப்பு காட்டப் போவதில்லை. ஆனாலும் எதிரணியில் போயிருந்து எங்கள் அரசியலை நீதி, நியாயமாக நடத்துவோம்.' - என்று மஹிந்த ராஜபக்ஷ சார்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் இந்தச் செய்தி மிக ஆழமான அர்த்தங்களைக் கொண்டிருப்பது கோட்டாபய ராஜபக்ஷவுக்கு புரியும். அதனால்தான் அவரை (பிரதமரை) வீட்டுக்கு அனுப்பும் நடவடிக்கையைத்தான் முன்னெடுக்க முடியாமல் அல்லலப்படுகின்றார். ஆனாலும் அடுத்த ஓரிரு தினங்களில் அரசு மாற்றம் - பிரதமர் உட்பட - தவிர்க்க முடியாததாக அரங்கேறும் என்பதுதான் அரசியல் வட்டாரங்களில் இப்போதுள்ள பேச்சு.

★ ★ ★

நாளை மறுதினம் நாடாளுமன்றம் கூடும் போது முதல் விடயமாக பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற இருக்கின்றது. அரசுத் தரப்பில் டிலான் பெரேராவும் எதிரணி தரப்பில் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரும் வேட்பாளராக நிறுத்தப்படுவார்கள் என்று தெரிகிறது. இவர்களில் இம்தியாஸின் தந்தையார் பாக்கீர் மாக்கார் முன்னர் சபாநாயகராக இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை எதிரணி வேட்பாளர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லை எனத் தெரிகிறது.

தொடர்ந்து நாடாளுமன்றுக்கு வரக்கூடியநம்பிக்கையில்லாப்பிரேரணைகள் எத்திசையில் நகரும் என்பதற்கு நாளை மறுதினம் பிரதி சபாநாயகர் தேர்வு வாக்களிப்பு கட்டியம் கூறும் என எதிர்பார்க்கலாம்.

சரி, தமது தரப்பு அரசிலிருந்து வெளியேறி விட்டது என்பதால் பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் தலைவர் என்ற தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டார் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய. அவருக்கு அடுத்த நிலையில் குழுக்களின் பிரதித் தலைவராக இருக்கும் நம் அங்கஜன் இராமநாதனின் சுதந்திரக் கட்சியும் கூட அரசிலிருந்து வெளியேறி விட்டதுதானே. அவருக்கும் இந்தத் தார்மீகம் - இதே போன்று பதவி விலகும் பொறுப்பு - பொருந்தும்தானே? விவகாரம் புரிந்தும் அவர் மட்டும் ராஜினாமாச் செய்யாமல் இருப்பது ஏன்? புரியவில்லை.

– மின்னல் –

---

### இலங்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

- இவ்வாறு இந்தியாவின் ஆளுங்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவரான அண்ணாமலை தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மேதினநிகழ்வு நேற்று கொட்டகலை சி.எல்.எவ். வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பது சாதாரணக் கட்சி கிடையாது. ஆரம்பிக்கப்பட்ட அடையாளத்தை இன்னும் அக்கட்சி மறக்கவில்லை. தொழிலாளர்களை மையப்படுத்தியே அது பயணிக்கின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா, இலங்கையர்களுக்கு மட்டும் அல்ல, தமிழ்நாட்டில் இருந்த தமிழர்களுக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளார். குரல் அற்றவர்களின் குரலாக ஓங்கி ஒலித்துள்ளார்.

1947 இல் நடைபெற்ற தேர்தலில் 8 மலையக பிரதிநிதிகள் நாடாளுமன்றம் சென்றனர். அதன்பின்னர் குடியுரிமை மற்றும் ஏனைய உரிமைகள் பறிக்கப்பட்டன. அவற்றை மீட்டெடுப்பதற்கு தொண்டமான் பாடுபட்டார். வெற்றியும் கண்டார். தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தார். அமரர் ஆறுமுகன் தொண்டமானும் மக்களுக்காகவே அரசியல் செய்துள்ளார். தனது மக்களின் நில உரிமைக்காகப் போராடியுள்ளார்.

பாரத பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் முழு உலகமும் இந்தியாவை திரும்பி பார்க்கின்றது. இந்தியா என்பது வல்லரசு நாடாக மாறியுள்ளது. உலகில் 5ஆவது மிகப்பெரிய பொருளாதார பலமுடைய நாடாக மாறியுள்ளது. ரஷ்யா, உக்ரைனுக்கிடையில் மோதல் ஏற்பட்டபோத, கூட, உக்ரைனில் வாழ்ந்த இந்தியர்களை சிறு காயமின்றி மீட்டெடுத்தார்.

இலங்கையை அருகிலுள்ள நாடு, எமது சொந்தங்கள் வாழும் நாடு என இரு கோணத்தில் இந்தியா பார்க்கின்றது. அதனால்தான் நெருக்கடியான கட்டங்களில் உதவிகள் வழங்கப்படுகின்றன. உயிர் காப்பு மருந்து தேவை என்று சொன்னபோது, 107 வகையான 760 கிலோ மருந்துகளை அனுப்பி வைத்துள்ளோம். எதிர்காலத்திலும் உதவுவோம். மலையக மக்களுக்கான உதவிகளும் தொடரும். நாம் வளரும் அதேவேளை, எமது தொப்புள்கொடி உறவுகளையும் வளர வைப்போம். மலையகம் கல்வியால் உயர வேண்டும். அதற்கான உதவிகளும் தொடரும்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை, நீண்டகாலத்துக்கானது அல்ல. விரைவில் நிலைமை மாற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் போராடிக்கொண்டிருக்கின்றது. அன்று அனுமான் எப்படி சஞ்சீவ மலையை சுமந்தாரோ, அதுபோலவே இலங்கையின் பொருளாதார நெருக்கடியை சுமப்பதற்கு பாரத பிரதமர் நரேந்திர மோடியும் தயாராகவே இருக்கின்றார். - என்றார்.

---

### ஜனாதிபதியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சர்வகட்சி இடைக்கால அரசில் ஐக்கிய மக்கள் சக்தி இணையாது எனவும் இடித்துரைத்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதான மே தின பேரணியும், கூட்டமும் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் பொலன்னறுவை மாவட்டத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன, புதிய அரசை அமைப்பதற்கான போராட்டம் தொடரும் என அறிவித்தார். கட்சி தலைமையகத்திலும் மே தனி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பியின் மே தின நிகழ்வுகள் நான்கு மாவட்டங்களை மையப்படுத்தியமாக அமைந்தன. கொழும்பில் நடைபெற்ற பிரதான கூட்டத்தில் உரையாற்றிய கட்சித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் ஜே.வி.பி. தலைமையிலான ஆட்சியின் முக்கியத்துவத்தை பட்டியலிட்டார்.

11 கட்சிகளில் அங்கம் வகிக்கும் இடதுசாரி கட்சிகள் தனியே மே தின கூட்டத்தை நடத்தின. விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் பத்தரமுல்லையில் தனி நிகழ்வை நடத்தியது.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இம்முறை மேதின கூட்டத்தையும், பேரணியையும் நடத்தவில்லை. எனினும், மொட்டு கட்சிசார்பு தொழிற்சங்கத்தால் மே தின கூட்டமொன்று நுகேகொடையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில் மொட்டு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. எனினும், வாழ்த்து செய்திகளை அனுப்பி வைத்திருந்தனர்.

கூட்டத்தில் உரையாற்றிய மொட்டு கட்சி உறுப்பினர்கள், அரசு பதவி விலகாது எனவும், மஹிந்த இல்லாத சர்வக் கட்சி இடைக்கால அரசை ஏற்கமுடியாது எனவும் திட்டவட்டமாக அறிவித்தனர். காலிமுகத்திடல் போராட்டக்காரர்களாலும் மே தின நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

---

### புனித ரம்ழான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பள்ளிவாசலில் இடம்பெற்றிருந்தது. நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பிறை தென்பட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெறவில்லை என இதன்போது கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறைக்குழுவினர் அறிவித்தனர்.

இதனால் இலங்கையில் வாழும் இஸ்லாமியர்கள் இன்றைய தினமும் நோன்பு நோற்பதுடன் நாளை 3 ஆம் திகதி புனித ரம்ழான் பண்டிகையைக் கொண்டாடவுள்ளனர் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு தெரிவித்துள்ளது.

---

### தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற இப்பேரணியில் தற்கால வாழ்வியல் நிலையை எடுத்தியம்பும் வகையிலான ஊர்திகளும், நூற்றுக்கணக்கான இளைஞர்களின் ஒன்றிணைவினாலான மோட்டார் சைக்கிள் பவனியும் இடம்பெற்றன. பேரணியில் கலந்துகொண்ட பொதுமக்கள் பலரும் எழுச்சிக் கோசங்களையும், அரசுக்கு எதிரான மற்றும் தமிழினப்படுகொலைக்கும், காணாமலாக்கப்பட்டோருக்கும் நீதி கோரும் வகையிலான உணர்ச்சிக் கோசங்களையும் காட்சிப்படுத்தியிருந்தனர்.

தன்னெழுச்சியாக ஒன்றிணைந்த மாபெரும் சனத்திரட்சியோடு நடைபெற்ற இத் தமிழ்த்தேசியக் கூட்டு மே நாள் நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர்.பத்மநாதன் சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டங்களின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் மேனாள் உறுப்பினர்கள், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பொது மக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

### தேர்தலை நடத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கருத்துத் தெரிவிக்கையிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது ஆட்சிக் காலத்தில் நாட்டில் இது போன்று எவ்விதமான சூழ்நிலையும் இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தனது ஆட்சியின் பின்னர் மிகவும் நல்லதொரு நாட்டை ராஜபக்ஷக்கள் கைப்பற்றினர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் புதிய அரசாங்கத்தை அமைப்பதே தமது நம்பிக்கை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மகா சங்கத்தின் சங்கடம்

**இலங்கையில் அரசியல், பொருளாதார நெருக்கடி உச்சம் பெற்றிருக்கின்ற இவ்வேளையில், அதேபோல நாட்டின் அரசியலில் பௌத்த மத பீடத்தின் தலையீடும் கூட எல்லை மீறியிருக்கின்றது.**

**நாடு இத்தகைய நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கையில், நாட்டின் பெரும்பான்மையினரின் மதத்தினுடைய தலைவர்கள் என்ற முறையில் – அரசமைப்பு மூலம் முன்னுரித்து அளிக்கப்பட்ட மதம் என்ற அடிப்படையில் – நாட்டை மீட்பதற்காக நடுநிலை நின்று ஒரு வழிகாட்டலை வழங்குவதற்கு மகா சங்கத்தினர் முயல்வது தவறில்லை. அது அவர்களின் கடப்பாடும் பொறுப்பும் கூட.**

**ஆனால், அந்த வழிகாட்டலில் ஒரு நேர்மைத்தனம், நடுநிலைப் பண்பு, நியாயம் உரைக்கும் திறன் ஆகியவை இருக்க வேண்டும். விடயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, ஒட்டு மொத்த நாட்டுக்குமுரிய நலனைக் கவனத்தில் எடுத்து, நேர்மையாக நடக்கும் பொறுப்பு மதபீடத்துக்கு உண்டு.**

**அதை மறந்து, பௌத்த மதபீடம் இந்த விவகாரத்தில் தான் அரசியல் செய்யக் கூடாது. நாட்டின் உள்விவகாரங்களில் தான் முக்கிய தரப்பு – சக்தி – என்பதை உறுதிப்படுத்தி நிரூபிக்கும் காய் நகர்த்தலில் அது ஈடுபடக் கூடாது. ஒட்டு மொத்தத்தில் மூன்றாந்தர அரசியல்வாதியாக அது தன்னை முன்னிறுத்தக் கூடாது.**

**எது நடக்கக் கூடாதோ, அதுதான் நடப்பதாக சந்தேகம் ஏற்படும் விதத்தில் மகா சங்கம் செயற்படுகின்றது.**

**இந்த ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிராக உருவான மக்கள் கிளர்ச்சி – புரட்சி – எழுச்சி – தன்னியல்பாக எழுந்தது. குடும்ப எதேச்சாதிகாரத்துக்கும் ஊழலுக்கும் எதிராக மக்கள் கிளர்ந்துள்ளனர்.**

**அந்தக் கிளர்ச்சியின் விளைவுதான் அரசியல் நெருக்கடியாகப் பிரவாகம் எடுத்துள்ளது. மக்களின் அந்தக் கோரிக்கை – எதிர்பார்ப்பு – வீராவேசம் – நியாயமானது. அதற்கு தீர்வு கண்டு வழிகாட்டுவது மகா சங்கத்தின் பொறுப்பாக இருக்க வேண்டும்.**

**ஆனால் அந்தப் போராட்டக்காரர்களுடன் உரையாடவோ, ஊடாடவோ, அவர்களுக்கு வழிகாட்டவோ மகா சங்கம் முயலவில்லை.**

**மாறாக, அரசியல்வாதிகளை வழிப்படுத்துவதில்தான் – ஒர வஞ்சனையுடன் வழிப்படுத்துவதில்தான் – மகா சங்கத்தின் கவனம் செல்கின்றதோ என்றே சந்தேகம் எழுந்துள்ளது.**

**மக்களின் சுயாதீனமான எழுச்சி மகா சங்கத்தையும் நிலை குலைய வைத்துவிட்டது போலும். தங்களின் வழிப்படுத்தலுக்குள் சுருண்டு நிற்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் போலல்லாமல் காலிமுகத்திடல் கிளர்ச்சியாளர்கள் சுயமாகச் சிந்தித்து, சுதந்திரமாக முடிவெடுப்பார்கள், அவர்களுக்கு முகம் கொடுக்க முடியாது என்று மகா சங்கத்தினருக்கும் அச்சம் இருக்கின்றதோ என்னவோ! சங்கப் பிரகடனத்துக்கு – ஆணைக்கு – தென்னிலங்கை அரசியல்வாதிகள் அஞ்சுவது போல காலிமுகத் திடல் போராட்டக்காரர்களுக்கு அஞ்ச வேண்டிய தேவை ஏதும் இல்லை அல்லவா?**

**நடந்த பேரவலத்துக்கு எல்லாம் ஜனாதிபதிதான் பொறுப்பு என்பது மக்களின் நிலைப்பாடு. அதனால்தான் அவரை விட்டுக்குப் போ என்று போராட்டம் நடத்துகின்றார்கள் மக்கள். ஆனால் மகா சங்கத்தினரோ அவரைக் காபந்து பண்ணிக் கொண்டு, ஜனாதிபதியின் கைப்பொம்மையாக இயங்க வேண்டிய பதவியில் இருக்கும் பிரதமரை இலக்கு வைக்கின்றார்கள்.**

**சர்வ கட்சி அரசை அமைப்பதோ, அல்லது அதை நிலைநிறுத்துவதற்காக இருக்கும் பிரதமரை வீட்டுக்கு அனுப்புவதோ எல்லாம் ஜனாதிபதியின் எதேச்சாதிகார வலிமைக்கு உட்பட்டவையே. அவற்றைச் செய்யுமாறு ஜனாதிபதிக்கு சங்க ஆணை – அல்லது பிரகடனம் – செய்ய வக்கற்ற மகா சங்கம், பிரதமரை மட்டும் இலக்கு வைத்து காய் நகர்த்துவது அந்த அமைப்பும் மூன்றாம் தர அரசியல் கட்சி போன்றதுதான் என்ற எண்ணத்தையே தந்து நிற்கின்றது.**

# நாடு உத்தியோகபூர்வ வங்குரோத்து நிலை நிதி கட்டமைப்பு வெடித்துச் சிதறி வருகிறது!

### மே தின செய்தியில் சம்பிக்க கருத்து



நாடு கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகதியில் இருந்து உத்தியோகபூர்வமாக வங்குரோத்து அடைந்து விட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடு வங்குரோத்து அடைந்துள்ள நிலைமையில், வெளிநாட்டு முதலீடுகள், வெளிநாடுகளுடன் மேற்கொள்ளும் கொடுக்கல், வாங்கல்கள், வெளிநாட்டு வர்த்தகம் என்பன நின்று போயுள்ளன.

வங்கி கட்டமைப்பு மிகவும் ஆபத்தான நிலைமையை நோக்கி சென்றுக்கொண்டிருக்கின்றது. நிதி கட்டமைப்பு வெடித்து சிதறி வருகிறது.

இதன் காரணமாக சில நாள்களுக்கு அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் நிறுத்தும் அறிவிப்பை அரசாங்கம் வெளியிட நேரிட்டது. இவற்றின் மூலம் நாட்டின் அபிவிருத்தி முற்றாக ஸ்தம்பித்து போயுள்ளதைக் காண முடிகிறது.

குறிப்பாக தனியார் துறையின் 26 லட்சம் வேலை வாய்ப்புகள் பாரதூரமான ஆபத்துக்கு உள்ளாகி உள்ளன. சுற்றுலாத்துறைக்கு மேலதிகமாக தொழிற்சாலைகளும் தற்போது மூடப்பட்டு வருகின்றன.

நாட்டிற்குள் இயங்கி வந்த முக்கியமான தொழிற்சாலைகள், ஆடை உற்பத்தித் துறை என்பன வேறு நாடுகளை நோக்கி கொண்டு செல்லப்படுகின்றன. அதேபோல் அரச சேவையும் படிப்படியாகப் பாரதூரமான நெருக்கடியை நோக்கி செல்ல உள்ளது எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

# 60 இலிருந்து 140 வீதம் வரை உணவுப்பொருள் விலை எகிறல்!

### ஜனவரி முதல் இன்று வரையான கணிப்புகளில்

ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் உள்ளிட்ட பல பொருள்களின் விலைகள் 60 வீதத்தில் இருந்து 140 வீதம் வரை அதிகரித்துள்ளன.

பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், மார்ச் மாதத்தில் மாத்திரம் உணவுப்பொருள்களின் விலையேற்றம் அல்லது உணவிற்கான பணவீக்கம் 29.5 ஆக அமைந்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் வரை, நாட்டில் பணவீக்கம் எனப்படும் பொருள்களின் விலையேற்ற வேகம் 10 வீதத்தை விடவும் குறைவாகவே அமைந்திருந்தது.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் தாக்கம் செலுத்தும் ஒரு சில பொருள்களின் விலை அதிகரித்த விதம் தொடர்பில் வெளியாகியுள்ள தகவல்கள் வருமாறு:–

ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 161 ரூபாவால் அதிகரித்துள்ளதுடன், அது 91 வீதம் அதிகரிப்பாகும்.

ஒரு லீற்றர் டீசலின் விலை 168 ரூபாவால் அதிகரித்துள்ளது. இது 139 வீத அதிகரிப்பாகும்.

வீட்டுப் பாவனைக்கான சமையல் எரிவாயு விலை 77 வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி 147 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் சீனியின் இன்றைய விலை 260 ரூபாவாகும்.

இந்த காலப் பகுதியில் ஒரு கிலோகிராம் பருப்பின் விலை சுமார் 300 ரூபாவால் அதிகரித்துள்ளது.

ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் விலை 87 ரூபாவால் அதிகரித்துள்ளது. இன்று ஒரு கிலோகிராம் சம்பா அரிசியை கொள்வனவு செய்வதற்கு குறைந்தது 240 ரூபா தேவைப்படுகிறது.

400 கிராம் எடையுடைய பால் மா பக்கெட்டின் விலையும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரை 310 ரூபாவால் அதிகரித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 134 ரூபாவால் அதிகரித்த நிலையில், ஒரு இறாத்தல் பாணின் விலையும் 83 ரூபாவால் அதிகரித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி 1,275 ரூபாவாக இருந்த ஒரு மூடை சிமெந்தின் இன்றைய விலை 2,850 ரூபாவாக அமைந்துள்ளது.

ஏப்ரல் மாதமளவில் அநேகமான பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை இரட்டிப்பிற்கும் மேலாக அதிகரித்துள்ளதாகவும் 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நான்கு பேர் கொண்ட குடும்பமொன்றின் வழமையான செலவு 10 ஆயிரம் ரூபா தொடக்கம் 15 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் பேராதனை பல்லைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோறல குறிப்பிட்டார்.

எனினும், தனிநபர் வருமானம் எந்தவொரு வகையிலும் அதிகரிக்காமல் செலவுகள் மாத்திரம் அதிகரித்துள்ளதால், பொதுமக்களால் சமாளிக்க முடியாத நிலை உருவாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# பொலிஸாரின் வீதித்தடைகளுக்கு எதிராக நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனு!

சட்ட கட்டமைப்பிற்கு உட்பட்டு போராட்டம் நடத்தும் மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொலிஸார் வீதித் தடுப்புகளை அமைப்பதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கம்பஹா பிரதேசத்தைச் சேர்ந்த ஷெனால் ஜெயசேகர என்பரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில், பொலிஸ் மா அதிபர், கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பொதுமக்களின் போராட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், பொலிஸாரால் அமைக்கப்பட்ட வீதித் தடைகள், நிரந்தரத் தடுப்புகள் மற்றும் அலரிமாளிகை அருகே நடைபாதையைத் தடுத்துள்ளமை என்பவற்றை மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொது மக்களையும் பாதிக்கும் இந்த கட்டுப்பாடுகள், ஒன்று கூடும் சுதந்திரம் மற்றும் சித்திரவதையில் இருந்து பாதுகாப்பு உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும் என அவர் தமது மனுவில் கூறியுள்ளார்.

போராட்டக்காரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள அனைத்து வீதித் தடைகளையும் அகற்ற நீதிமன்ற உத்தரவை மனுதாரர் கோரியுள்ளார்.

மேலும், வீதித்தடுப்புகளை அமைப்பதற்கு முன் உயர் நீதிமன்றத்திடம் அனுமதி பெறுமாறு பொலிஸாருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும், வீதித் தடுப்புகளை அமைப்பது தொடர்பாக வழிகாட்டல்களைத் தயாரிக்க பொலிஸ் அதிபருக்கு உத்தரவிட வேண்டும் என்றும் மனுதாரர் கோரியுள்ளார்.

# ஊடகவியலாளர்கள் மீது கோரத் தாக்குதல் வவுனியாவில் மூவர் பொலிஸாரால் கைது!

வவுனியாவில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

வவுனியா – வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் சனிக்கிழமை மாலை எரிபொருள் நிரப்புவதற்காக வவுனியாவைச் சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் சென்றுள்ளனர். இதன்போது அதிகமான பொதுமக்கள் வரிசையில் நின்றமையால் அந்த நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களால் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையிலிருந்த ஊழியர்களுக்கும், அவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. கருத்து முரண்பாடு முற்றிய நிலையில் தாம் ஊடகவியலாளர்கள் என அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தனர்.

அதனைப் பொருட்படுத்தாத ஊழியர்கள் கடந்த முறையும் எமது நிரப்பு நிலையம் தொடர்பான செய்தியை நீதானே பிரசுரித்தாய் எனக் கூறி கடுமையாகத் தாக்கியுள்ளனர். குறித்த சம்பவத்தில் ஊழியர்களுடன் இணைந்து நிரப்பு நிலையத்தின் முகாமையாளரும் தாக்கியிருந்தார். அத்துடன் அவர்களது மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டு அடித்துத் துரத்தப்பட்டனர்.

சம்பவத்தில் காயமடைந்த ஊடகவியலாளர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற நெளுக்குளம் பொலிஸார் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் உட்பட மூன்று பேரைக் கைது செய்துள்ளமையுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை மேற்படி நிரப்பு நிலையத்தின் கண்காணிப்பு கமரா பதிவுகளை வழங்குமாறு ஏனைய ஊடகவியலாளர்களால் அதன் நடத்துநருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் மின்சாரம் இல்லை என்பதால் இரகசிய கமரா இயங்கவில்லை என குறித்த நிலைய முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள பிரதான நிரப்பு நிலையங்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் பொதுமக்களுக்கும், நிரப்பு நிலையத்தின் ஊழியர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் டொலர் பாதிப்பு காரணமாக சாரதி அனுமதிப் பத்திரங்கள் நிறுத்தம்

நாட்டில் தற்போது நிலவும் டொலர் நெருக்கடி காரணமாக சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான உரிய பரீட்சைகளில் சித்தியடைந்த சுமார் 3 லட்சம் பேருக்கு இதுவரை சாரதி அனுமதி அட்டைகள் வழங்கப்படவில்லை என அலுவலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மோட்டார்போக்குவரத்து ஆணையாளர் அலுவலகம் மாதத்துக்கு சுமார் 60 ஆயிரம் ஓட்டுநர் உரிமங்களை வழங்குவதாகவும், டிசெம்பர் 2021 முதல் புதிய ஓட்டுநர் அட்டைகளை அச்சிட்டு வழங்க முடியவில்லை என்றும் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

10 லட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான கடனுதவி கடிதங்களை வழங்குவதற்குத் தேவையான டொலர்கள் இல்லாததால் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## பொருளாதார நெருக்கடியால் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடும் மக்கள்

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களின் எண்ணிக்கை சுமார் 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாகபாதுகாப்புதரப்பினர்தெரிவித்துள்ளனர்.

விசேடமாக கடல் வழியாக இவ்வாறு தப்பி செல்வது இலகுவாக இடம்பெறுவதால் பல கடல் எல்லைகளில் கடற்படையினர் நீண்ட காலமாகப் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இலங்கை விமானப்படையும் இந்த நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருவதாக விமானப்படை பேச்சாளர் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வடக்கில் இருந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்வோரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர். அண்மைக் காலத்தில் வட மாகாணத்தை சேர்ந்த சுமார் 200 பேர் இவ்வாறு இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் செல்ல முயன்ற பலர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு தப்பிச் செல்ல பல்வேறு மீன்பிடி படகுகளை சிலர் பயன்படுத்தியுள்ளனர் எனவும் இதன் காரணமாக குறித்த படகுகள் தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் விசேட தேடுதல்களை மேற்கொண்டுவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ‘கோ ஹோம் கோட்டா – 2022’ முகப் புத்தக நிர்வாகி அடிப்படை உரிமைமீறல் மனு தாக்கல்

கொழும்பு, மே 02

சமூக ஊடக செயற்பாட்டாளரும் ‘கோ ஹோம் கோட்டா – 2022’ எனும் முகப்புத்தக பக்கத்தின் நிர்வாகியுமான திசர அனுரத்த பண்டார 100 கோடி ரூபா நட்ட ஈடு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்ர குமார, முகத்துவாரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நளின் சிறியந்த, சட்ட மா அதிபர் உள்ளிட்ட பலரை பிரதிவாதிகளாகப் பெயரிட்டு, பொலிஸாரிடமும், அரசிடமும் நட்ட ஈடு கோரி இந்த மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி யொஹான் அன்டனி பீரிஸ் ஊடாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர், தனக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த நாட்டுக்கும் நன்மை பயக்கும் அந்நிய செலாவணியை நாட்டுக்கு கொண்டுவரும் சக்தியை உடையவர் என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில், ஓர் இளைஞனாக இலங்கையில் நிலவும் அரசியல் கட்டமைப்பு தொடர்பில் ஆழ்ந்த அதிருப்தியுடன் இருக்கிறேன் எனவும், அதனால் இலங்கை உலகில் பெரும் பின்னடைவைச் சந்தித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பற்ற தீர்மானங்களுக்கும் தற்போதைய அரசியல் கட்டமைப்புக்கும் எதிராக, 55 ஆயிரத்துக்கும் அதிகமான பின்தொடர்பவர்களைக் கொண்ட தனது முகநூல் பக்கத்தின் ஊடாக போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளேன் எனவும், அவ்வாறான போராட்டத்தை அமைதியான முறையில் நடத்துமாறும் தனது முகநூல் பக்கத்தின் ஊடாக அறிவித்தேன் எனவும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து வருட காலத்துக்கு ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த முடியாது எனக் கூறி தன்னை முகத்துவாரம் பொலிஸ் பொறுப்பதிகாரி கைது செய்து விசாரித்தார் என மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையிலேயே தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனக் கூறி மனுதாரர் அதற்காக 100 கோடி ரூபாவை நட்ட ஈடாக பெற்றுத்தருமாறு கோரியுள்ளார்.

அண்மையில் மிரிஹானையில் ஜனாதிபதியின் இல்லத்துக்கு அருகே இடம்பெற்ற பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து, ஏப்ரல் 2 ஆம் திகதி ஜனாதிபதி மற்றும் அரசு தொடர்பில் பொது மக்களிடையே விரோதத்தை ஏற்படுத்தும் வண்ணம் செயற்பட்டார் எனக் கூறி திசர அனுரத்த பண்டார முகத்துவாரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

தண்டனை சட்டக் கோவையின் 120 ஆவது அத்தியாயத்தின் கீழ் குற்றம் ஒன்றைப் புரிந்தார் எனக் கூறி கைது செய்யப்பட்ட அவர், கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யோகக்கலை கற்கைநெறி புதிய பிரிவுகள் ஆரம்பம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 21.05.2022 அன்று நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் 19 வயதுக்கு மேற்பட்ட ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. பயில விரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களை பெற்று 21.05.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு “கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் அரச வேலைநாள்களில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வரி அறவீடு அதிகரிப்பதைத்தவிர மாற்றுவழி ஏதும் கிடையாதாம்!

### நிதி அமைச்சர் அலி சப்றி தெரிவிப்பு



நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு வழிமுறையாக வரி அறவீடு அதிகரிக்கப்பட வேண்டும்.

அதனைத் தவிர வேறு மாற்றுவழி கிடையாது என்று நிதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் வற் வரியை 8 சதவீதம் வரை குறைப்பதற்கு எடுத்த தீர்மானம் தவறானதாகும் என்று நிதி அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

அத்தியாவசியப் பொருள்களைக் கூட இறக்குமதி செய்யக் கூடிய நிலைமையிலுள்ள இலங்கை போன்ற நாட்டுக்கு தற்போது நடைமுறையிலுள்ள வரி வீதம் எந்தளவிலும் போதுமானதல்ல என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய வற் வரி வீதத்தை நூற்றுக்கு 13 – 14 சதவீதம் வரை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 8 மாதங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள் இறக்குமதிக்காக சுமார் 400 கோடி டொலருக்கும் அதிக நிதி தேவையாகவுள்ளது.

அதனைப்பெற்றுக்கொள்வதற்கானநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீர்திருத்தப்பட்ட நிறைவேற்று அதிகார முறைமையே தமிழர்களுக்கு அவசியம்

## கலாநிதி தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டு



சீர்திருத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தமிழர்களின் பாதுகாப்புக்கு அவசியமானதாகும் என்று தெரிவித்துள்ள கலாநிதி தயான் ஜயதிலக்க, இனவாதம், பிரிவினை வாதம், உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் கருப்பை நாடாளுமன்ற முறைமை யாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகள் எடுத்துள்ள நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வாக்குச் செலுத்தவல்ல எதிரணி தற்போது நிறைவேற்று அதிகார ஜனதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற நிலைப் பாட்டை எடுத்து கோஷங்களை எழுப்ப ஆரம்பித்துள்ளன.

உண்மையிலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை சீர்திருத்துவதற்குப் பதிலாக அதனை ஒழிப்பதற்கான முழக்கத்தை இட்டுவருகின்றன.

இலங்கையின் பிரகாசமான எதிர் காலத்தைப் பறித்த கொள்கைகளும் அனைத்து அடிப்படைத் தவறுகளும் வெஸ்ட்மின்ஸ்டர் முறைமையை அடியொற்றிய நாடாளுமன்ற ஆட்சி முறைமையின் கீழாகவே நடைபெற்றுள்ளன.

குறிப்பாக, நாடாளுமன்ற முறைமை மூலமே, 1931ஆம் ஆண்டு முதல் தேர்தல்களில் வாக்களித்த இந்திய வம்சாவளியைச்சேர்ந்த மலைநாட்டு மக்கள் வாக்குரிமை மறுக்கப்பட்டனர். 1953 இல் முதல் வெகுஜன எழுச்சியும் பொலிஸ் துப்பாக்கிச் சூடுகளும் (8பேர் இறந்தனர்) நடைபெற்றன.

லீ குவான் யூ இலங்கைத் தீவின் பூர்வீக பாவம் என்று அடையாளப்படுத்திய சிங்களம் மட்டும் கொள்கை 1956 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பண்டாரநாயக்கா – செல்வநாயகம் உடன்படிக்கை 1957 ஆம் ஆண்டு இரத்துச் செய்யப்பட்டு கிழித்தெறியப்பட்டது.

பொதுத்துறையில் தேர்ச்சிக்கான பரீட்சைகள், பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் முறைமாற்றம், பாடசாலைகளை மத்திய அரசின் கீழ் கையகப்படுத்தல், பல்கலைக்கழக நுழைவுத் தரப்படுத்தல் கொள்கை ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன.

ஜே.வி.பியின் 1971 கிளர்ச்சி மற்றும் அதன் இரத்தக்களரி ஒடுக்குமுறை சுதந்திரமான பொதுச்சேவை ஆணைக்குழு ஒழிக்கப்பட்டமை, அரசநிர்வாகத்தை அரசியல்வாதிகளுக்கு அடிபணியச் செய்யப்பட்டமை, சிங்களத்துக்கான அரசமைப்பு அந்தஸ்து, பௌத்த மதத்துக்கு முதலிடம் ஆகியனவும் ஏற்படுத்தப்பட்டன.

1972 இல் தமிழ் புதிய புலிகளின் உருவாக்கம், 1976 இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் உருவாக்கம், 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஆகியனவும் நாடாளுன்ற முறைமையின் கீழேயே இடம்பெற்றன.

இவ்வாறிருக்கையில், ஜனாதிபதி முறைமையின் கீழாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலையக மக்களின் வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டமை, மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வுக்கான 13 ஆவது திருத்தச்சட்டம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை, 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத்திட்டம் போன்ற ஏற்படுத்தப்பட்டன. ஆகவே, ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் முயற்சி, பொருத்தமற்றது. மாறாக, எதேச்சதிகார ஜனாதிபதி முறை சீர்திருத்தப்பட்டு நிறைவேற்று அதிகார முறைமை நீடிக்க வேண்டும். – என்றார்.

# முழு சமூகத்தின் அவமான சின்னமாக ஒருவர் மாறியுள்ளார் என்ற வேதனைதான் எங்களுக்கு!

## ஹக்கீம் காட்டம்



முழு சமூகத்தின் அவமான சின்னமாக ஒருவர் மாறியுள்ளார் என்கின்ற வேதனை தான் எங்களுக்கு உள்ளது என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இந்த ஊரை சேர்ந்த ஒருவர் அமைச்சு பதவி எடுத்துள்ள விவகாரம் மிக மோசமான விமர்சனத்துக்கான விவகாரமாக மாறியுள்ளது என்பது சர்ச்சைக்குரிய விடயம் அல்ல.

அது ஊரும் அங்கீகரிக்கின்ற விடயம் அல்ல. ஆனால், அவர் தாமாக சென்று அரசியல் தற்கொலை செய்துகொண்டுள்ளமையையிட்டு அலி சாஹிர் மௌலானாவிற்கு ஆத்ம திருப்தி இருக்கும்.

தலைமைக்கு எதிராகத் தாறுமாறாக பேசிக்கொண்டு திரிகின்றவர்கள் ஏன் இவற்றை அவர்கள் பிரசன்னமாக இருந்த அரசியல் உச்ச பீடத்தில் கதைக்கவில்லை என்பது தான் பிரச்சினைக்குரிய விடயம்.

ஒவ்வொரு அரசியல் உச்சபீடக் கூட்டத்தின் முழுமையான அதன் பதிவுகள் இருக்கின்றன. தேவை என்றால் பதிவுகள் வெளியில் கொண்டு வரப்படும். முழு சமூகத்தின் அவமான சின்னமாக ஒருவர் மாறியுள்ளார் என்கின்ற வேதனை தான் எங்களுக்கு உள்ளது.

நடவடிக்கைகள் எடுக்கும் விவகாரத்தில் தாமதம் ஏற்பட்டாலும் நாங்கள் சரியாக செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் சற்று நேரம் எடுக்க வேண்டியிருந்தது. இருந்தாலும் இந்த விவகாரத்தில் கராரான நடவடிக்கைகளை சரியாக எடுத்துள்ளோம். – எனத் தெரிவித்துள்ளார்.





# கடற்படைப் படகு மோதி மீனவர் படகு சேதமடைவு!

## யாழ்.வடமராட்சி கடலில்

யாழ். வடமராட்சி கடற்பரப்பில் வைத்து கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவரின் படகு மீது கடற்படைப் படையினரின் படகு மோதி விபத்து ஏற்படுத்தப்பட்டது.

சம்பவத்தில் கடற்தொழிலாளிகள் இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியமையுடன், சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தேவராசா தேவகுமார் என்பவரது படகே இவ்வாறு சேதமடைந்துள்ளது.

படகு சேதமடைந்ததால் நடுக்கடலில் தத்தளித்த கடற்தொழிலாளிகள் இருவரையும் சில நிமிடங்கள் கழித்து கடற்படையினர் படகுடன் இழுத்து வந்து கரை சேர்த்துள்ளனர்.

தமது படகு மீது கடற்படையின் அதிவேகப் படகு ஏறிச் சென்றது என்று கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் கடற்படையின் படகு மோதியதால் தனது படகு மீளப்பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளதாகவும் 10 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கடற்தொழிலாளர் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# உண்மையை சமூகத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும்

## ஹக்கீமை பகிரங்க விவாதத்திற்கு அழைத்தார் நசீர் அஹமட்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை தன்னுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அமைச்சர் நசீர் அஹமட் அழைப்பு விடுத்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைச்சர் நசீர் அஹமட் இவ்வாறு பகிரங்க விவாதத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். நடந்தவற்றை உரியவாறு சமூகத்திடம் ஒப்புவிக்கும் பொறுப்பிலிருந்து தாமும் கட்சியின் தலைவரும் நழுவி விட முடியாது எனக்குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் யார் குற்றவாளி அல்லது சுற்றவாளி என்பதையும் எவரது பொறுப்புகள் சமூகக் கட்டமைப்பிலிருந்து நழுவின என்பதையும் சமூகமே தீர்மானிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 20 ஆவது திருத்தத்திற்கு தான் உட்பட ஹாரிஸ், பைசல் காசிம், தௌபீக் ஆகியோர் ஆதரவளித்த தன் பின்புலத்தில் நடைபெற்ற பேச்சுகள், அவை இடம்பெற்ற இடங்கள் இன்றும் எழுந்தமானமான கதைகளாகவே உள்ளன என நசீர் அஹமட் குறிப்பிட்டுள்ளார்.

இதன் உண்மைத்தன்மையை சமூகத்துக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை தனக்கு இருப்பதாகவும், அதனை ஆதாரபூர்வமாக முழு ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாடு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரின் அனுமதியுடனேயே 20 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு வாக்களித்ததாக அமைச்சர் நசீர் அஹமட் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ராஜபக்ஷர்களுக்கு எதிராக மாறுபட்ட போராட்டங்கள்










சமகால அரசாங்கத்துக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கலைஞர்கள் புதிய வடிவிலான போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

ராஜபக்ஷர்களின் மோசடிகளை அம்பலப்படுத்தும் வகையில் பல்வேறு வேடங்களில் மக்கள் மத்தியில் ஊர்வலமாக சென்று எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

மேதினமான நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டில் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் இடம்பெற்றன.

அதேவேளை காலிமுகத்திடலிலும், அலரி மாளிகைக்கும் முன்னாலும் பொது மக்கள் முகாமிட்டு தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் எரிபொருள் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படும் வாய்ப்புள்ளது?

நாட்டுக்கு எரிபொருளை இறக்குமதி செய்யும் கப்பல்களிடம் இருந்து தரகு பணம் பெறும் நடவடிக்கை காரணமாக நாட்டுக்குள் பாரதூரமான எரிபொருள் தட்டுப்பாட்டு நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இன்று எந்த எரிபொருள் கொள்கலன் வண்டிகளும் எரிபொருளை விநியோகிக்க செல்லாது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் குறைந்தளவிலேயே கொள்கலன் வண்டிகள் இருக்கின்றன. இதன் காரணமாக தனியாரின் உதவியுடன் நாடு முழுவதும் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு இணையாக போக்குவரத்து விலைகள் அதிகரிக்காமைக்கு எதிராக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தனியார் கொள்கலன் வண்டிகளின் உரிமையாளர்களின் சங்கம் சனி நள்ளிரவு முதல் பணிகளில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர்.

## பெருமளவு கேரளா கஞ்சா மீட்பு பொலிஸார் தீவிர விசாரணைகள்

கிளிநொச்சி – பூநகரி, வேரவில் பிரதேசத்தில் 130 கிலோகிராம் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவ புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலிற்கு அமைவாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் குறித்த கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு வெளி இடங்களுக்கு அனுப்பும் நோக்குடன் வேரவில் பிரதேசத்தில் உள்ள பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்பில் மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளின் பெறுமதி இலங்கை மதிப்பில் 2.5 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொதிகள் ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் திருகோணமலை மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் வலுவடைந்து வருகின்ற நிலையில், அரசியல் நிலைமைகளை உடனடியாக சரியான நிலைக்கு நிறுவுங்கள் என்பதை வலியுறுத்தி நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்து வெளியிட்ட போராட்டக்காரர்கள் –

இனவாதத்தை முன்னிறுத்தி ஆட்சி பீடம் ஏறிய குறித்த ஆட்சியாளர்கள் ஒரு நல்லது செய்திருக்கிறார்கள் இவ்வளவு காலமும் நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தி இருந்த நிலையில் தற்போது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் ஊடாக அனைவரும் ஒன்றுபட்டு இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

ஊழல் நிறைந்த அரசியலில் இருந்து அவர்கள் விடுபட்டு நல்லதொரு சுபீட்சமான நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்று திரள வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவித்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயற்பாட்டாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# இடைக்கால அரசாங்கத்தின் மோசடிகளுக்காக மக்கள் போராட்டத்தை காட்டிக்கொடுக்க முடியாது

## தந்தையின் நினைவேந்தலில் சஜித் தெரிவிப்பு





மக்கள் போராட்டத்தை, இடைக்கால அரசாங்கத்தின் மோசடிகளுக்காக காட்டிக் கொடுக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் நினைவேந்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

மோசடி, இலஞ்சம், ஊழல் நிர்வாகத்திலிருந்து விடுவிப்பதற்காகக் கொண்டுவரப்படும் மோசடியான தந்திரோபாயமே இடைக்கால அரசாங்கமாகும் எனவும் சஜித் தெரிவித்தார்.

இதனூடாக, இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக நாட்டை மேலும் சீர்குலைக்கும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான மோசடியான அரசாங்கத்துடன் இணைவதை விட பதவிகளை இராஜினாமா செய்வதே தனக்கு மகிழ்ச்சியானது எனவும் தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் புனிதமான போராட்டத்தை மோசடியான முறையில் காட்டிக்கொடுக்க மாட்டோம் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் உருவச்சிலைக்கு முன்னால் இருந்து இந்த உறுதியை வழங்குகிறேன் எனவும் தெரிவித்தார்.

மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 29 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) புதுக்கடையில் உள்ள ரணசிங்க பிரேமதாஸ உருவச்சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

அந்த நிகழ்விலேயே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

# 10 வயதுச் சிறுவன் துஷ்பிரயோகம் வடமராட்சியில் இளைஞன் கைது!

யாழ். வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் பத்து வயது சிறுவனை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 32 வயது இளைஞரை கைது செய்துள்ளோம் என மருதங்கேணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மாமுனையை சேர்ந்த இளைஞன் மீது சிறுவனின் தந்தை பொலிஸாரிடம் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இளைஞனை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட சிறுவன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைபடுத்தவுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டில் எந்த மாற்றமும் வராது பகிரங்கமாக அறிவித்தார் ரணில்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூற்றுப்படி, அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டாலும், 21ஆவது அரசமைப்பு சீர்திருத்தம் உருவாக்கப்பட்டாலும், நாட்டில் எந்த மாற்றமும் ஏற்படாது என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தின் போதே முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பலர் வேலையை இழந்துள்ளனர். டொலர் தட்டுப்பாடு மற்றும் மோசமான நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக அரசாங்கம் ஸ்திரமற்ற நிலைக்குச் சென்றுள்ளதாகவும், இதனால் மக்களின் அன்றாட வாழ்வில் எரிவாயு, உணவு, எரிபொருள் மற்றும் மின்சாரம் போன்றவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூற்றுப்படி, அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டாலும், 21 ஆவது அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும், எந்த மாற்றமும் ஏற்படாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்டத்தில் தமக்கு விருப்பம் இல்லை எனவும், 21 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளதால் பொருளாதார ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவது கடினம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 4 கோடி ரூபா பெறுமதியான இரு சொகுசு வாகனங்கள் உட்பட பொருள்கள் சட்டவிரோத இறக்குமதியால் மீட்பு!

இங்கிலாந்து நாட்டில் இருந்து சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 4 கோடிக்கும் அதிக பெறுமதியான இரு அதிசொகுசு ரக வாகனங்கள் உட்பட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு – புறக்கோட்டை பகுதி வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான 4 கோடிக்கும் அதிக பெறுமதியான இரு அதிசொகுசு ரக வாகனங்கள், 5 வாகன உதிரி பாகங்கள் மற்றும் 1,000 கிலோ கிராம் மஞ்சள் தூள் உள்ளடங்கிய பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என இலங்கை சுங்க பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த பொருள்கள் உள்ளடங்கிய கொள்கலனின் நிறை சுமார் 1,000 கிலோ கிராம் என்றும் சம்பவம் தொடர்பில் இலங்கை சுங்க திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரணசிங்க பிரேமதாஸவின் 29 ஆவது நினைவு தினம்



நாட்டின் இரண்டாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான அமரர் ரணசிங்க பிரேமதாஸவின் 29 ஆவது நினைவு தினம் நேற்றாகும்.

இதனை முன்னிட்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பு புதுக்கடை பகுதியிலுள்ள அவரது உருவச்சிலைக்கு அருகில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஹேமா பிரேமதாஸ, குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பலர் நிகழ்விடத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொழும்பு மாநகரசபை உறுப்பினராக அரசியலில் பிரவேசித்து, நாட்டின் இரண்டாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக படிப்படியாக உயர்வு கண்ட ரணசிங்க பிரேமதாஸ ஒப்பற்ற மக்கள் தலைவராக இன்றும் போற்றப்படுகிறார்.

# கொழும்பில் பொலிஸார் தாக்குதல் சந்தேக நபர் தப்பியோட்டம்!

பம்பலப்பிட்டி கடற்பகுதியில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் ஓட்டோவில் பயணித்தார் என கிடைத்த தகவலுக்கு அமைய, அதே வீதியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேக நபர் பயணித்த ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்டுள்ளார்.

மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவ இடத்துக்கு வந்து அவரைப் பிடிக்க முற்பட்ட போது சந்தேக நபர் பொலிஸாரைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வயிற்றிலும் மற்றையவர் கையிலும் காயமடைந்துள்ளமையுடன், இருவரும் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்படவில்லை.

# அரசாங்கத்தின் செயற்றிறனின்மையே டொலர் பெறுமதி அதிகரிப்புக்கு காரணம்!

## ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் குற்றச்சாட்டு









ரூபாவை மிக மோசமான முறையில் இழிவுபெறச் செய்து, டொலரின் பெறுமதி உயர்ந்து சென்றதற்கு நிதி முகாமைத்துவத்தின் அரிச்சுவடி கூடத் தெரியாதவாறு செயலாற்றிய தற்போதைய அரசாங்கத்தின் திறமையே காரணம் என ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தியும் அரசுக்கு எதிராகவும் பெண்கள் மத்தியஸ்தனத்தால் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை ஆரம்பித்த குறித்த பேரணி மணிக்கூண்டுச் சந்தியை அடைந்து அங்கிருந்து மீண்டும் பழைய பஸ் நிலைய பகுதிக்கு ஊர்வலமாக சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் கருத்து தெரிவிக்கையில் –

நாம் ஆடைத் தொழிலில் ஈடுபடுகின்ற பெண் தொழிலாளர்கள் ஆவோம். நாட்டுக்கு வெளிநாட்டுச் செலாவணியைக் கொண்டு வருவதற்கான உழைப்பை நாமே வழங்குகின்றோம். ஆடைத் துறையின் படையணியில் 85 வீதமானவர்கள் நாமே.

தனியார் பிரிவையும் ஊழியர் படையணியையும் ஊக்குவிக்கவும் பலப்படுத்துவதற்காக அரசாங்கம் வசதிகளை வழங்கியது முதலாளிமாருக்கு தவிர எமக்கு அல்ல. அதற்காக எமக்கு வழங்கப்பட்ட நிவாரணங்கள் எவை என நாம் அரசிடம் கேள்வியெழுப்புகின்றோம்.

ரூபாவை மிக மோசமான முறையில் இழிவுபெறச் செய்து, டொலரின் பெறுமதி உயர்ந்து சென்றதற்கு நிதி முகாமைத்துவத்தின் அரிச்சுவடி கூடத் தெரியாதவாறு செயலாற்றிய தற்போதைய அரசாங்கத்தின் திறமையே காரணம்.

இன்று விலைவாசி உயர்வையடுத்து நாடுமுழுவதும் மக்கள் போராட்டங்கள் எழுச்சிபெற்று வருகின்றன. காலிமுகத்திடலில் எழுச்சி பெற்று வருகின்றன. அவற்றை அரசு செவிமடுத்ததாகத் தெரியவில்லை.

இவற்றின் அடிப்படை நோக்கமானது 21ஆம் திருத்தத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை இரத்துச் செய்வது மட்டுமல்ல, விலைவாசியைக் கட்டுப்படுத்தி தொடர்ச்சியான ஜனநாயக ஆட்சியொன்றை நிறுவக்கூடிய 13 ஆவது திருத்தச் சட்டத்தைப் பூரணமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் புதிய பிரதிநிதித்துவமொன்றுடனான நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதுமாகும்.

சர்வதேச தொழிலாளர் தினத்தை இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கவனத்தைச் செலுத்துவதற்குப் பாவிக்கப்பட வேண்டும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

நிகழ்கால ஏகாதிபத்திய ஆட்சியைத் தோற்கடித்து, கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு இடமளித்து அடிமைத் தனமற்ற இலங்கையைக் கட்டியெழுப்புவதற்காக ஆண் பெண், கட்சி, நிறம், இனம், சாதி, மத பேதங்களின்றி அனைத்து தொழிலாளர் சக்திகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு ஏகோபித்த குரலெழுப்புவதற்கு உறுதி பூண்டு அணிதிரள்வோம். – இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

# ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலையில் எரிபொருளை இறக்க தயாராகும் இலங்கை

இலங்கை ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்ய முடியுமா என்பது தொடர்பாக ஆராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது.

எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு செலவாகும் அதிகமான பண செலவைக் குறைக்கும் நோக்கில், ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலையில் எரிபொருளை கொள்வனவு செய்ய இலங்கை திட்டமிட்டு வருகிறது.

ரஷ்யாவுக்கு எதிராகத் தற்போது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகள் காரணமாக அந்நாட்டில் இருந்து எரிபொருளை இறக்குமதி செய்வது தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைகளைக் கோரியுள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்வது சம்பந்தமாக எரிசக்தி அமைச்சுடன் பேச்சு நடத்தியதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து மிகக் குறைந்த விலையில் எரிபொருளைக் கொள்வனவு செய்ய முடியும் என்பதால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அது தொடர்பில் கவனத்தை செலுத்தியுள்ளது.

எவ்வாறாயினும் வெளிவிவகார அமைச்சின் ஆலோசனைக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா ஏற்கனவே இந்தியாவுக்கு குறைந்த விலையில் எரிபொருளை விநியோகித்து வருகிறது.

அத்துடன் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தொடர்பான நெருக்கடியான நிலைமையில் இந்தியாவே இலங்கைக்கு எரிபொருளை விநியோகித்து வருகிறது.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடி துரதிஷ்டவசமான ஒரு சம்பவம் ஆகும்!

## இஸ்ரேலியத் தூதுவர் கவலை

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியை துரதிர்ஷ்டவசமானது என்று இஸ்ரேலின் இந்தியா, இலங்கை மற்றும் பூட்டானுக்கான தூதுவர் நோர் கிலோன் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கைத் தீவு மீண்டும் ஸ்திரத்தன்மைக்கு வர சுற்றுலா மற்றும் விவசாயத்தில் அதன் திறனைப் பயன்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் தமது நற்சான்றிதழ்களை சமர்ப்பிக்க இலங்கைக்கு சென்றிருந்தபோது அது, மிகப்பெரிய ஆற்றல் கொண்ட ஓர் அழகான நாடு என்பதை கண்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அங்கு பொருளாதார மற்றும் அரசியல் சரிவு இருப்பதைப் பார்க்க மிகவும் வருத்தமாக இருக்கிறது என்று கிலோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை சுதந்திரத்திற்குப் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக முதல்வருக்கு ஹக்கீமும் பாராட்டு!



'காலத்தினாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது'

என்ற திருக்குறளுக்கு ஏற்ப அவர் உரிய நேரத்தில் உடனடியாக உதவி செய்வதற்கு முன் வந்துள்ளமை பாராட்டுக்குரியது.

'அண்டை வீட்டுக்காரன் பசித்திருக்கையில் தான் வயிறு நிரம்பப் புசிப்பவர் நம்மை சேர்ந்தவர் அல்லர்' என்ற நபிமொழிக்கு ஏற்ப, அயல் நாட்டு மக்கள் துன்பப்படக்கூடாது என்ற வகையில் இந்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் என்றல்லாது, இலங்கை மக்கள் என்று அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது 'யாதும் ஊரே யாவரும் கேளிர் 'என்ற பழமொழியை நினைவூட்டுகிறது.

தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் விதத்தில் மக்களை பிரித்துப் பார்க்காமல் அனைவருக்கும் அவர் உதவிகள் செய்ய முன்வந்துள்ளமை உலக அளவில் பலரது பாராட்டையும் பெற்றுள்ளது.

மாநில சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய உடன் இலங்கைக்கு அத்தியாவசிய பொருள்களை அனுப்ப உரிய அனுமதி வழங்கத் தேவையான அறிவுறுத்தல்களை மத்திய வெளியுறவு துறை அமைச்சகம் உடனடியாக வழங்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு அவர் கடிதம் எழுதி இருக்கின்றமையும் பாராட்டுக்குரியதாகும்.

எடுத்த காரியங்களை விரைவில் செவ்வனே செய்து முடிப்பதில் தளபதி மு.க. ஸ்டாலினுக்கு நிகரில்லை என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளார். இலங்கை மக்கள் சார்பிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பிலும் தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலினுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு என்றில்லாது ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் உதவித் திட்டங்களை வழங்க முன்வந்தமைக்காகத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டுக்களையும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் 01.05.2022 அன்று தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு –

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றமை முதல் தளபதி நண்பர் மு.க. ஸ்டாலின் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை, குறிப்பாக அவர்கள் வசிப்பதற்கான குடியிருப்புகள் போன்ற செயல் திட்டங்களைச் சுட்டிக்காட்டலாம்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்குத் தமிழகத்தில் இருந்து 40 ஆயிரம் தொன் அரிசி, 500 தொன் பால் மா மற்றும் மருத்துவ உபகரணங்கள் என ரூபா 123 கோடி மதிப்பில் பொருள்களை அனுப்புவது தொடர்பாக 29.04.2022 அன்று தமிழக சட்டப்பேரவையில் ஒரு தனித் தீர்மானம் தாக்கல் செய்த தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அந்தத் தீர்மானத்தை அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றியுமுள்ளார்.

# மட்டக்களப்பு...



















தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணத்துக்கான மே தினக் கூட்டம் இன்று மட்டக்களப்பு கல்லடி பாலத்தருகிலுள்ள மீனிசைப் பூங்காவில் மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் தொழிற்சங்கப்பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கிளிநொச்சியில் கூட்டமைப்பு மே தினக் காட்சிகள்




























# மட்டக்களப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மே தினப் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஷ், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.


















காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசிய மே நாள் பிரகடனம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று கிளிநொச்சியில் நடத்திய மேதின நிகழ்வின்போது வெளியிடப்பட்ட தமிழ்த்தேசிய மே நாள் பிரகடனம். வருமாறு:–

இன்று சர்வதேச மே நாள். உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தொழிலாளர் சமூகத்தின் நல உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கிலெழுந்த சிக்காக்கோவின் உரிமைக்குரலுக்கு மானுட சமூகம் மரியாதை செலுத்திய வரலாற்றின் நாள்.

ஒடுக்குமுறை மேலோங்கி, உணர்வுகள் சிதைக்கப்பட்டு, உழைப்பின் வலி உணராத காலத்தின் விழிப்பாக சிக்காக்கோ சமவாயம் விளங்குகின்றது. உழைப்புக்குப் பெறுமதியும், உழைப்பாளர்களுக்கு மரியாதையும் அளிப்பதன் ஊடாக அகில அரசுகளின் சிறந்த ஆட்சிக்கு அடிப்படையாக அமைந்தது இந்த நாளே!

இற்றைவரை மனித உரிமைகள் என்றும், மானிட சமத்துவம் என்றும் பரிந்துரைக்கின்ற சமவாயங்கள் வெளிப் படுத்தப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. ஆனால் வர்க்க ஆதிக்கம் புனைந்து கொண்ட அதிகார ஆசைகள், பொருளாதார இச்சைகள் காரணமாக சமவாயங்கள் அளித்துள்ள சந்தர்ப்பங்களை தொழிலாளர்கள் அனுபவிக்க முடியாத நிலையே இருந்துவருகின்றது.

சவால்கள் பலவற்றை சந்திக்க நேரிட்டபோதும், சர்வதேச அரசுகளின் மதியாண்மை, அறிவியல் வளர்ச்சி, தூரநோக்கு, பன்முகப்பார்வை, பொருளாதார சமத்துவம் என்னும் குறிக்கோள்களை நோக்கிய பன்முகப் பரிணாமங்களில், வேற்றுமையில் ஒற்றுமை காணவும், விவேகம் கொள்ளவும், விளைதிறன் மிக்க முடிவுகளைக் காணவும் அவர்களால் முடிந்திருக்கிறது.

ஆனால் வரலாற்றின் துரதிர்ஷ்டமாக இலங்கையினுடைய தொழிலாளர் நல உரித்துக்களும், உழைப்பினூடாகப் பெறப்படும் உன்னத பெறுபேறுகளும் மக்களால் அனுபவிக்க முடியாத அறுவடைகளாகவே இருந்துவருகின்றன. ஆட்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதாக எண்ணி ஜனநாயகம், சோசலிசம் என்பவற்றின் கதவுகளை அடைத்து பௌத்த சித்தாந்தத்தின் மீதிருந்து ஆட்சி புரிகின்ற ஆட்சியாளர்களின் மனஉலகு, மனிதசமூகம் வெட்கித்தலைகுனியும் விளைவுகளையேஏற்படுத்திவருகின்றது. பௌத்த கருத்துக்களால் கட்டமைக்கப்பட்ட அரச கருமபீடம் வினைத்திறனுடன் இயங்குவதும், மகாவம்ச மனநிலை காரணமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சிங்கள ஏகாதிபத்திய கருத்தியல்களும் இன வேற்றுமை எதுவுமின்றி தொழிலாளர்களின் வாழ்வியலை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது.

சமகாலத்தில் இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடி, பணவீக்கம், பொருளாதாரச் சுமைகள், உயர்ந்த வாழ்க்கைச் செலவீனம், சரிந்துசெல்லும் உற்பத்தித்திறன் மற்றும் மூடப்பட்டுள்ள சர்வதேச சந்தைகள் என்பவற்றின் அடிவிளைவுகள், கடந்த 30 வருடகால யுத்தத்தின் விளைவுகளே அன்றி வேறில்லை எனலாம்.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில், கிடைத்த சுதந்திரத்தின் உள்ளார்ந்த பொருள் உணராமை காரணமாக சிங்கள மக்களின் வரலாற்றுத்தீவாக இலங்கையை ஆட்சியாளர்கள் அர்த்தப்படுத்திக் கொண்டனர். வடக்கு, கிழக்கு என்னும் தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்படத் தவறியமையும், கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கான எத்தனங்கள் ஏற்படுத்தப்பட்டமையும், போரையும், போரின் விளைவுகளையும் இம்மண்ணில் ஏற்படுத்தியது.

தமிழ்த்தேசிய இனத்தின் நீதியான அபிலாசைகளை ஏற்கமறுத்து, முதிர்ச்சியற்றதும், அரசியல் முகாமைத்துவத்திறனற்றதுமான முடிவுகளால் சர்வதேச வல்லரசுத்தனங்களுக்கு நிகரான யுத்தத்தை எமது மக்கள் எதிர்கொண்டனர். அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்ட அவலங்கள் சர்வதேச வரலாற்றில் எங்கும் பார்த்திருக்க முடியாதவை, பதிந்திருக்க முடியாதவை. அத்தகைய இன அழிப்பு ஒன்றிற்காகப் பெறப்பட்ட பல்லாயிரம் கோடி கடன் பணத்தின் விளைவே இன்றைய ஆட்சி அதிகார சீர்குலைவுக்கு அடிப்படையாய் அமைந்துள்ளது.

விசேடமாக, போருக்குப் பின்னர் சர்வதேச சமூகத்தால் பரிந்துரைக்கப்பட்ட ஜெனீவாத் தீர்மானங்களைப் புறம்தள்ளியமை, வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கத் தவறியமை, தொடர்ந்தும் தமிழர் தாய்நிலங்களை அபகரிக்க முனைகின்றமை, மக்களின் சுதந்திர செயற்பாடுகளை இராணுவ வல்வளைப்புக்கு உட்படுத்தியமை, தமிழர்களின் பாரம்பரியங்களை தொல்பொருட் சான்றுகள் என்று பிடுங்கி எறிந்தமை, மண்ணின் விடுதலைக்காக வித்துடலாகியவர்களின் நெஞ்சில் ஆக்கிரமிப்பின் கால்களை அகலப்பதித்தமை என்பவற்றின் பரிகார நீதியாகவே இன்றைய ஆட்சி, அதிகாரத்தின் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது.

வரலாற்றின் உண்மைகளை மறைத்து, பௌத்த சிங்கள இனவாதத்தால் கட்டமைக்கப்பட்ட செயல்களை ஊக்குவித்து, இன சமத்துவத்தை இல்லாதழித்து, அறமும் நீதியுமற்ற அநியாயச் செயல்களால் அதள பாதாளத்துள் வீழ்ந்து கிடக்கும் நாட்டில் இன்று மே தினம். நீறுபூத்த நெருப்பாய் நின்றெரியும் இனப்பகைமையை இல்லாதொழித்து, சமத்துவமும் ஐக்கியமும்மிக்கசரித்திரதேசமொன்றைக் கட்டியெழுப்பும் சிந்தனை இன்று சிங்கள மக்களிடம் எழுந்துள்ளமை மகிழ்ச்சியும், இந்நாளின் எழுச்சியும் ஆகும்.

முற்போக்கு எண்ணங்களுக்கு முதன்மை நல்கி, பல்லின சமவாயங் களைப் பகிர்ந்தளித்து, தமிழர்மீது ஏற்படுத்தப்பட்ட கறைபடிந்த நிலையினின்று நீங்கி, சர்வதேசம் பகரும் நிலைமாறு கால நீதியை ஏற்று, வட, கிழக்கு தமிழர் தாயகத்தை அங்கீகரித்து, தமிழர்களின் சுயநிர்ணய உரித்துக்களை ஏற்று, வேற்றுமையில் ஒற்றுமை கண்டு முன்னோக்கிச் செல்லும் திடசங்கற்பம் சிங்கள இனவாத ஆட்சிபீடத்தில் ஏற்படாதவரை, இலங்கைத்தீவில் இன, மத வேற்றுமை அற்ற வகையில் தொழிலாளர் உரிமைகளைப் பெற்று வாழ முடியாது என்பதே இன்றைய மே தின அறைகூவல் ஆகும். – என்று உள்ளது.

## பிரபுக்களின் ஆட்சியை அகற்றி மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவோம்

### யாழ் மேதினத்தில் ஜே.வி.பியின் ரில்வின் சில்வா சூளுரை



இலங்கையில் பிரபுக்கள் ஆட்சியை நடத்தும் ராஜபக்ஷக்களின் ஆட்சியை அடியோடு நீக்கி மக்கள் ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

யாழ்வீரசிங்கம்மண்டபத்தில்நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையில் மேதின கூட்டத்தில் நாம் கலந்து கொண்டுள்ளோம்.

எமது நாட்டில் அன்றாடம் கூலி தொழில் செய்கின்ற அப்பாவி தொழிலாளர்கள் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகின்ற நிலையில் ஆட்சியாளர்கள் அவர்கள் தொடர்பில் சிந்திப்பதில்லை.

தொழிலாளர்களின் உரிமையை வேண்டி இடம்பெறுகின்ற மே தினத்தில் அப்பாவி தொழிலாளர்களை நசுக்கும் தற்போதைய அரசாங்கம் விரைவில் வீடு செல்ல வேண்டும்.

நாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் அதித விலை அதிகரிப்பு, எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு டொலருக்குத் தட்டுப்பாடு என தற்போதைய அரசாங்கம் மக்களை வாட்டி வதைக்கிறது.

ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் நாட்டை கடனில் மூழ்கடித்து செல்லும் நிலையில் அடுத்து ஆட்சிக்கு வருபவர்கள் அவர்களின் குறைகளைச் சுட்டிக்காட்டி தாமும் நாட்டைக் கொள்ளையடித்துத் செல்கிறார்கள்.

ராஜபக்ஷக்கள்தமதுசகபாடிகளுக்குப் படிப்படியாக முழு நாட்டையும் விற்பனை செய்துவரும் நிலையில் இலங்கையில் வாழும் மக்கள் எங்கு செல்வது?

வெளிநாட்டுப் பிரஜைகளாக இருக்கும் ராஜபக்ஷகள் சிலர் தாய் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் வெளிநாடுகளுக்குத் தப்பி விடுவார்கள்.

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவர்களும் தமது தலைமைகளை நம்பி வாக்களித்து ஏமாற்றப்பட்ட நிலையில் அரசியல் ஆதரவற்றவர்களாக நிற்கிறார்கள்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் மக்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

போராட்டக்காரர்கள் நாட்டின் இந்த நிலைமைக்கு காரணமாக விளங்குகின்ற ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக தமது பதவிகளில் இருந்து வெளியேற வேண்டும். தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டுவரும் நிலையில் ராஜபக்ஷக்கள் அதிகார மோகத்தால் பதவி விலகாமல் உள்ளனர்.

ஆகவே இனவாதம் இல்லாத, ஊழலற்ற தாய்நாட்டை உருவாக்குவதற்கு தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் மக்கள் விடுதலை முன்னணியுடன் கைகோர்க்கும் நேரம் வந்துள்ள நிலையில் எம்மோடு கைகோருங்கள். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு மே தினக் காட்சிகள்

ஜே.வி.பியின் மே தினம்



வாசு உள்ளிட்ட இடதுசாரிகளின் கூட்ட மேடை



ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினம்



# மன்னம்பிட்டியவின் வாகன விபத்தில் கணவன், மனைவி உட்பட மூவர் பலி

பொலன்நறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியில் மன்னப்பிட்டி பாலத்துக்கு அருகில் நேற்று காலை 6.30 அளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூன்று பேரே உயிரிழந்துள்ளனர் என மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரலகங்வில அருணபுர பிரதேசத்தை 67 வயதான யு.டப்ளியூ.ஜீ.ரண்பண்டா, 62 வயதான அவரது மனைவி ஜீ.கே. நந்தவதி மற்றும் இவர்களின் உறவினரான டி.ஜீ.விமலா ரந்தெனிய என்ற 72 வயதான பெண்மணி ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அருணபுர பிரதேசத்தில் இருந்து மாத்தளையில் உள்ள உறவினர்களின் வீட்டுக்கு செல்லும் வழியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவர்கள் சென்ற ஓட்டோவுடன் மோதிய தனியார் பஸ் பொலன்நறுவை திசையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஊழியர்களை ஏற்றிச் சென்றுள்ளது.

விபத்து சம்பவத்தை அடுத்து பஸ்ஸின் சாரதியை தாம் கைது செய்துள்ளதாக மன்னப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அசேல சரத் குமார தெரிவித்துள்ளார்.

ஓட்டோ மற்றுமொரு பஸ்ஸை முந்தி செல்ல முற்பட்ட போது, எதிரில் வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# டொலர் நெருக்கடியால் விமானம் மட்டுப்படுத்தல்

நாட்டில் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியின் விளைவாக இலங்கைக்கு சேவையாற்றும் விமான சேவை நிறுவனங்களுக்கு 15 கோடி அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டியுள்ளது எனத் தகவகள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக பெரும்பாலான விமான நிறுவனங்கள் கொழும்பில் இருந்து தங்கள் விமானங்களை மட்டுப்படுத்துகின்றன என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 3 - 6 மாதங்களில் சரக்கு மற்றும் பயணிகள் பயணங்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளன என்றும் விமானத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இலங்கை வங்கிகள் மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பணம் அனுப்ப முடியாமல் போனதன் விளைவுகள் இவை எனவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

## ராஜபக்ஷக்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு: -

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் மக்கள் பக்கம் நின்றே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுத்தது. ஆனால் எமது சமூகத்தை காட்டிக்கொடுக்கும் விதத்தில் ஒரு சிலர் செயற்படுவதால் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆயிரம் ரூபா என்பது எமது இலக்கல்ல என்பதை தேர்தல் காலத்திலேயே அறிவித்துவிட்டோம். கல்வியும், காணி உரிமையும்தான் பிரதான இலக்கு. அதனை அடைவதற்கே தீவிர முயற்சியில் இறங்கியுள்ளோம். எண்ணம்போல்தான் செயல் என்பார்கள்.மலையகத்தில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது கனவும் கூட.

நான் பதவிக்காக அரசியல் செய்பவன் அல்லன். மக்களுக்கானதே எனது அரசியல் பயணம். அதனால்தான் ராஜபக்ஷ அரசுடனான உறவை முறித்துக் கொண்டு, இன்று மக்கள் பக்கம் நிற்கின்றோம். அப்படி இருந்தும் வரலாறு தெரியாத சிலர், காங்கிரஸை விமர்சித்து வருகின்றனர்.

மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தில் இ.தொ.கா. பட்டி அணிவிக்கப்பட்டிருந்தது குறித்தும் விமர்சிக்கின்றனர். இ.தொ.கா என்பது மக்கள் இயக்கம். மக்களை பாதுகாத்த அரசியல் இயக்கம். மக்களுக்கு உரிமைகளை வென்றுக் கொடுத்த அரசியல் கட்சி. எனவே, அதை அணிவதில் சிக்கல் கிடையாது. இதற்கு ஏன் பதிலளிக்கவில்லை என சிலர் கேட்கின்றனர்.நாய்கள் குரைக்கும்போது, சிங்கங்கள் அஞ்சுவது கிடையாது.

எமது மக்களுக்கு நில உரிமை வேண்டும். 150 வருடங்களாக நிலமற்றவர்களாக வாழ்கின்றோம். இதனை பெற்றுக் கொடுப்பதற்கு இந்தியாவின் உதவியும் அவசியம். அதற்கான உறவு பாலமாக அண்ணாமலை இருப்பார் என நம்புகின்றேன். - என்றார்.

## கிழக்கில் கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன் ஆரம்ப நிகழ்வாக மட்டக்களப்பின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்த மீனவர் சங்கம், ஆசிரியர் சங்கங்கள், மகளிர் சங்கங்கள், ஓட்டோ சங்கத்தினர், விவசாய சங்கத்தினர் உட்பட பல்வேறு சங்கங்கள் ஒன்றிணைந்து மட்டக்களப்பு மாநகரிலிருந்து பேரணியாக, விலைவாசி அதிகரிப்பு, பொருள்கள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றின் நெருக்கடிகளை உணர்த்தும் வகையில் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மீனிசைப் பூங்காவை வந்தடைந்தனர்.

இம்முறை மேதினமானது 'இருளாக்கப்பட்ட நாட்டில் வரட்சியாக்கப்பட்ட நிலத்தில் வதைபடும் எம் உழைக்கும் மக்களுடன் ஒன்றிணைந்து குரல் கொடுக்க அணி திரண்டு வாரீர்!' எனும் தொனிப் பொருளுக்கமைய நடைபெற்றது.

இதன் ஆரம்பநிகழ்வாக அதிதிகள் மற்றும் தொழிற்சங்கவாதிகளால் திருவிளக்கேற்றப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக விரிவுரையாளர் சுரேந்திரா நரேந்திரா தமிழ்மொழி வாழ்த்திசைக்க, உயிர்நீத்த தொழிலாளர்கள் அனைவருக்குமாக இரண்டு நிமிட நேரம் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் தேசியப் பட்டியல் எம்.பியான மா.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், முன்னாள் அரசாங்க அதிபர் மா. உதயகுமார், மட்டக்களப்பு மாநகர சபை பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான மா.நடராசா, இரா.துரைரத்தினம், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, மீனவர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், ஓட்டோ சங்கத்தினர், மகளிர் சங்கத்தினர், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்

இதன்போது உரையாற்றிய பிரமுகர்கள் தொழிலாளர் ஒற்றுமையுணர்வுடன் செயற்படுவதன் மூலமே எதனையும் அடைந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்தனர்.

# அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பில் ஓமந்தையில் 16 பேர் ஒன்றாகக் கைது!

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பில் காட்டுப் பகுதியில் கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட 16 பேர் கைது செய்யப்பட்டு ஓமந்தைப் பொலிஸாரிடம் நேற்றுமாலை ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, கோதாண்டர் நொச்சிக்குளம் காட்டுப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான நடமாட்டம் இருப்பதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் விசேட சோதனையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அங்கு கத்தி, வாள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் பலர் ஒன்று கூடி அந்த ஆயுதங்களால் கேக் வெட்டி கொண்டாட்டத்தில் இருந்த நிலையில் 16 பேர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடம் இருந்து கத்தி, வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஓமந்தைப் பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர்கள் ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சகல நிலைமைகளும் கைமீறிவிட்டன; ஜனாதிபதியிடம் தீர்வுக்கான தீர்மானம்!

## ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ கருத்து

கொழும்பு, மே 02

பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் நாட்டில் ஏற்பட்டுள்ள அனைத்து எதிர்மறையான நிலைமைகளும் கைமீறிவிட்டன என்று சுட்டிக்காட்டிய கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடத்திலேயே உக்கிரமடைந்து வரும் அனைத்து விடயங்களுக்குமான தீர்வு காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போத அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டின் பொருளாதாரத்தில் நெருக்கடியான நிலைமைகள் ஏற்பட்ட தருணத்தில் அதாவது கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசியல் ரீதியாக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அதனை நான் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதியிடத்தில் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம்.

அச்சமயத்தில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அந்த விடயத்தைப் பொருட்டாகக் கொள்ளவில்லை. அதன் பின்னர் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்தன.

பொருளாதார நிலைமைகள் இறுக்கமான கட்டத்தை அடைந்தது ஒருபுறமிருக்கையில் காலிமுகத்திடல் தொடர் போராட்டங்கள் உடப்பட பொதுமக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

தற்போது அந்தப் போராட்டங்கள் முழு வீச்சை அடைந்து விட்டன. இந்த நிலையில் கூட, 21 ஆவது திருத்தச்சட்டத்தை தற்காலிக ஏற்பாடாக கொண்டு வருவதற்கான வரைவொன்றை தனிநபர் பிரேரணையாக நான் உள்ளிட்ட எமது அணியினர் சபாநாயகரிடத்தில் கையளித்துள்ளோம்.

ஆனால் அதுசம்பந்தமாக அரசாங்கம் கூடிய கரிசனை கொண்டதாக இல்லை. தற்போது கூட ஜனாதிபதி சர்வ கட்சிகளின் பங்கேற்புடனான இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்குத் தயாராக உள்ளார் எனத் தெரிவிக்கின்றார்.

ஆனால், எதிர்க்கட்சி இந்த செயற்றிட்டத்தில் இணைவதற்குத் தயாரில்லை. ஆகவே இந்த முயற்சி வெற்றி அளிக்குமா என்று திடமாக நம்பிக்கை கொள்ள முடியாது.

எதிர்க்கட்சி சாவல்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய திராணியைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சி சவால்களுக்கு முகங்கொடுக்காது, தனது அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எதிரணியில் இருக்கும் ஏனைய கட்சிகளும் அவ்விதமான மனோ நிலையையே கொண்டிருக்கின்றன. அந்த வகையில் பார்க்கின்றபோது நாட்டின் நெருக்கடிகளுக்கு சுமுகமான தீர்வுகளைக் காணும் காலங்கடந்துவிட்டது. அனைத்து நிலைமைகளும் கைமீறி விட்டன.

இந்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய விடத்திலேயே தீர்வுக்கான இறுதித் தீர்மானம் உள்ளது. நிறைவேற்று அதிகார முறை ஜனாதிபதியிடத்தில் தான் இறுதி தீர்மானம் உள்ளது. அவர் நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங் கப் போகின்றாரா?

புதிய பிரதமர் தலைமையில் அரசாங்கத்தை அமைக்கப்போகின்றாரா? இல்லை போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக தான் பதவி விலகப் போகின்றாரா? என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும்.

அவ்வாறில்லாது காலதாமதப்படுத்தப்படுமாயின் நிலைமைகள் மேலும் உக்கிரமடையும். தற்போது மேலெழுந்துள்ள 225 பேரும் தேவையில்லை என்ற மக்களின் மனோநிலை மேலும் வலுப்பெற்று போராட்டங்கள் தீவிரமடையும். - என்றார்.

## அரசுக்கும், ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த இரு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளும் ஒன்றாகச் சமர்ப்பிக்கப் பட்டாலும் இரு பிரேரணைகளிலும் ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை முன்னதாக எடுக்கக் கோரப்படும் எனத் தெரிகிறது.

அரசுக்கு எதிரான பிரேரணை முன்னதாக எடுக்கப்பட்டு அது நிறைவேற்றப்படுமானால் தற்போதைய அரசு பதவியிழந்து விடும்.

அதன் பின்னர் புதிய அரசு அமைந்து, நாடாளுமன்றம் புதிதாக அதன் அமர்வை ஆரம்பித்த பின்னரே மீண்டும் ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் புதிதாகச் சமர்ப்பித்து விவாதிக்க வேண்டி வரும்.

இரண்டு பிரேரணைகளும் நாளை மறுதினம் நாடாளுமன்றம் கூடிய பின்னர் இவ்வாரத்தில் ஒன்றாகச் சமர்ப்பிக்கப்படும். அதை சமர்ப்பிக்கும் பிரதான எதிரணித் தரப்பு ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை முதலில் விவாதத்துக்கு எடுக்கக் கோரும் எனத் தெரிகிறது.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் அதற்கு சட்ட ரீதியான வலு எதுவும் இல்லை. தார்மீக ரீதியாக ஜனாதிபதிக்கு எதிரான ஓர் அரசியல் அழுத்தத்தை அது வெளிப்படுத்தும். அவ்வளவுதான். எனினும் ஜனாதிபதியின் மீது நாடாளுமன்றத்துக்கு நம்பிக்கை இல்லை என்ற கருத்தியல் ஆழமாக அதன்மூலம் வெளிப்படுத்தப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.